**முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

**SCOP No**. 79/2022

நாள் : 16.04.2025

பெயர் : வான்மதி

PW1 : 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை : (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

2 ம் எதிர்மனுதாரரும், அவர் கணவர் வேந்தனும் பவானியில் 10 ஆண்டுகளாக குடித்தனம் செய்தார்கள் என்றால் சரிதான். என் தம்பி வேந்தன் இறப்பதற்கு முன்பு 2 ம் எதிர்மனுதாரருடன் சென்னம்பட்டியில் ஒன்றாக இருந்த விவரம் தெரியுமா என்றால் அவ்வாறு ஒன்றாக இருக்கவில்லை. என் தம்பி இறப்பதற்கு முன்பு நான் கோயம்புத்தூரில் குடியிருந்தேனா என்றால் இல்லை; பவானியில் என் அப்பா வீட்டில் வாடகைக்கு குடியிருந்தேன். தன்னை இறந்த வேந்தனின் வாரிசு என அறிவிக்கக் கோரி 2 ம் எதிர்மனுதாரர் பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.122/2021 என வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கை மறைத்து இந்த வழக்கில் 2 ம் எதிர்மனுதாரரை காட்டாமல் இந்த வழக்கை ஆரம்பத்தில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.5 வாரிசு சான்றிதழ் 2 ம் எதிர்மனுதாரருக்கு தெரியாமல் மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. இறந்த வேந்தனின் பணிப்பதிவேட்டில் 2 ம் எதிர்மனுதாரர் நாமினியாக காட்டப்பட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இறந்த வேந்தனின் பணப்பலன்களை தனக்கு வழங்கக்கோரி 06.07.2021 ல் 2 ம் எதிர்மனுதாரர், 1 ம் எதிர்மனுதாரருக்கு கடிதம் கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. 20.07.2021 ம் தேதியிட்டு 2 ம் எதிர்மனுதாரர் வட்டாட்சியருக்கு கொடுத்த ஆட்சேபனை கடிதம் எனக்கு தெரியாது. தனக்கு விவாகரத்து வழங்கப்பட்ட உத்தரவை என் தம்பி வேந்தன் 1 ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த உத்தரவை 1 ம் எதிர்மனுதாரரிடம் நான் கொடுத்தேனா என்றால் நினைவில்லை. (2 ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)